# ஓட்டமாவடி பிரதேச மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள்: ஓர் மதிப்பீட்டாய்வு

# The Challenges Faced by Differently Able People on Oddamavadi Region: An Evaluative Study

S.A. Haleema[1], M.N.F. Naseeha[2], M.F.M. Aslam[3] & A.R.F.S. Farween[4]

1, 2 Department of Geography, FAC, South Eastern University of Sri Lanka.
3, 4 Department of Arabic language, FIA, South Eastern University of Sri Lanka.
haleemasainulabdeen6@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

மாற்றுத்திறனாளிகளை மையப்படுத்தியதான இவ்வாய்வானது ஓட்டமாவடிப்பிரதேசத்தில் காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் தமது வாழ்வாதாரத்தினை பெற்றுக்கொள்வதில் பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால் அவர்கள் பற்றியதொரு மதிப்பீட்டினையும் அவர்கள் தமது அன்றாட வாழ்வியல் அம்சங்களை முன்னெடுத்துச் செல்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆராய்வதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வகையில் தரவுகளைப் பெறும்பொருட்டு முதல்நிலைத்தரவுகளான அவதானம் மற்றும் கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூட்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு முறைகளான தொகுத்தறி முறையைப் பிரதானமாகவும், உய்த்தறி முறையைத் துணையாகவும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதனடிப்படையில் பார்க்கும்போது ஓட்டமாவடிப் பிரதேத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்கை நிலை பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் பல வயதினைச் சார்ந்தோரும் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படுவதுடன் அவர்களில் அதிகமானோர் ஆண்களாகவும் தொழில்வாய்ப்பின்றியும் அடிப்படைக் கல்வி வசதிகள் இன்றியும் காணப்படுவதுடன் ஒரு சிலர் மாத்திரமே சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் இவர்கள் தம் குடும்பத்திலேயே தங்கி வாழ்வதனால் அவர்களது நிலைமையும் கடினமாகக் காணப்படுகின்றது. அத்துடன் இம்மாற்றுத்திறனாளிகள் மத்தியில் தாழ்வுமனப்பான்மை போன்ற உள நோய்களும் ஏற்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. எனவே இவர்கள் தாமும் தம் சமூகத்தின் பங்காளிகளே எனும் பொருட்டு தம் ஆற்றல்களை வெளிக்கொணர முயற்சிப்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அதற்குத் தேவையான முன்னெடுப்புக்களை பெற்றுக்கொடுப்பதனால் அவர்களது வாழ்வாதாரத்தினை முன்னேற்ற முடியும்.

## 1. அறிமுகம்

பொதுவாக மனிதர்களில் பலரும் பல்வேறுபட்ட குறைபாடுடையவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களில் மாற்றுத் திறனாளிகள், வலது குறைந்தவர்கள், ஊனமுற்றோர், அங்கவீனர்கள் என பலவாறாகவும் தமிழில் அழைக்கப்படுகின்றவர்கள் பற்றி நோக்கும்போது, குறைபாடுகள் என்பது அவர்கள் பிறவியினால் அல்லது பிறவியின் காரணமாக இல்லாமல் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உடல் அல்லது உள ரீதியாக ஏற்படும் குறைபாட்டினால், இன்றியமையாத சாதாரண, தனிப்பட்ட மற்றும் சமூக

வாழ்க்கையில் அவர்களால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்களாக காணப்படுவர்.[236]

அதாவது ஒருவரது குறைபாடு அவரது இயல்பான வாழ்க்கைக்கு தடையாக அமையும் போது அவரை மாற்றுத் திறனாளி என நாம் கருதுகின்றோம். மாற்றுத் திறனாளிகள் எனும் பதமானது ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தில் Handicap எனும் சொற்பிரயோகம் கொண்டே அழைக்கப்பட்டது. எனினும் அப்பதம் யாசகம் கேட்பவர்களை சுட்டியதினால் அப்பதம் பொருத்தமற்றது எனக் கருதப்பட்டு பின்னர் Disabled என அழைக்கப்படுகின்றது. இவர்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிமாகவோ குறைபாடுகளை அல்லது அசாதாரண உடலியல் செயற்பாடுகளை கொண்டவர்களாக காணப்படுவர். இக்குறைபாடு மனிதனின் இயல்பான நடத்தையில் ஏற்படும் அசாதாரண நிலைப்பாடாகும். "ஒரு நபரால் தனது வெளிச் செயற்பாடுகளை எடுத்துச் செல்வதற்கு இயலாமை அல்லது கட்டுப்பாடுகள் காணப்படுதலாகும். அது அவர்களின் பிறவியின் காரணமாக நீண்ட கால உடல், உள ரீதியான வலது குறைவாக இருக்கலாம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. [237]

இவர்கள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் பல்வேறு சட்டங்களும், தொழில் கொள்கைளும் பிரகடனங்களும் காணப்படுகின்றன. இவ்வகையில் நோக்கும் போது ஐக்கிய நாடுகள் சபை டிசம்பர் 3ம் திகதியை மாற்றுத் திறனாளிகள் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அத்தோடு 1981ம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் ஆண்டாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. அதன் மூலம் மாற்றுத் திறனாளிகள் விடயத்தில் விஷேட கவனத்தினை உலக மக்கள் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலக சனத்தொகையில் முதலாம் சிறுபான்மையினராக இவர்கள் காணப்படுவதோடு கிட்டத்தட்ட 15 வீதமாக இவர்களது சனத்தொகை விகிதாசாரம் காணப்படுகின்றது[238]. அதில் அதிகமானோர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் காணப்படுகிறது. ஆத்துடன் இங்கு கடந்த 30 வருட காலத்தில் ஏற்பட்ட கொடூரமான யுத்ததிலிருந்து விடுபட்டு இன்று அபிவிருத்தி செயற்பாடுகளில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் காணப்படும் மாற்றுத் திறனாளிகளின் விடயத்திலும் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு மொத்த சனத்தொகையில் 1.7 மில்லியன் மக்கள் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படுகின்றனர். ஆத்துடன் 1996ம் ஆண்டின் இல 28ன் சட்டமானது மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பிலானதாகக் காணப்படுகின்றது.

---

[236] UN Enable- Frequently Ased Questions : https://www.un.org/esa/socdev/enable/faqs.htm

[237] Department of Census and Statistics, Diseability in srilanka, https://www.unstats.un.org.

[238] Factsheet on Persons with Disabilities, https://www.un.org/development/desa/disabilities/resources/factsheet-on-persons-with-disabilities.html#menu-header-menu

அத்துடன் 2006 ஒக்டோபர் 17ன் 2016 இல 1ன் படி ஊனமுற்றோரின் அணுகும் வசதி தொடர்பிலான பிரகடனமும், 2013 ஜுலை மாதம் இவர்களுக்கு தொழில்வழங்கல் பற்றிய 05 வருட திட்டம் உருவாக்கப்பட்டதுடன் 2016ம் ஆண்டு இவர்கள் தொடர்பில் சர்வதேச மாநாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது[239].

அவ்வகையில் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் கோறளைப்பற்று மேற்கின் ஓட்டமாவடிப் பிரதேசமானது பல வருடகாலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுவதுடன் அதிகளவிலான கிராமிய வழக்காறுகளையும், படிப்படியாக முன்னேற்றமடைந்து வரும் கல்வி மற்றும் வாழ்வாதார நிலைமையும் கொண்டுள்ள ஒரு பிரதேசமாகவும் காணப்படுவதுடன் இங்கு மாற்றுத்திறனாளிகளின் நலனோம்பு விடயங்களும் குறைவாகவே காணப்படுகின்றன. இவ்வகையில் இவ்வாய்வானது ஓட்டமாவடிப் பிரதேசத்தில் வாழும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஓர் மதிப்பீட்டையும் அவர்கள் தமது அன்றாட வாழ்வில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தொடர்பிலுமான ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்ள முயல்கின்றது.

## 2. ஆய்வின் முக்கியத்துவம்

ஆய்வுப் பிரதேசமானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஓர் பாரம்பரிய விவசாயக் கிராமமாகையால் அங்கு பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு காலகட்டத்தில் அங்கு வாழ்கின்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது வாழ்வாதார நிலைமை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதனை மதிப்பீடு செய்வதானது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஓட்டமாவடிப் பிரதேசத்தில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் மாற்றுத்திறனாளிகள் மிகவும் நெருக்கடிகளுடனேயே தமது அன்றாட வாழ்வினை கொண்டு செல்வதனைக் காணமுடிகின்றது. இத்தகைய நெருக்கடிகளுக்கான காரணம் மற்றும் சவால்கள் என்ன என்பதனைக் கண்டறிதல் அவசியமானதாகும்.

## 4. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளது:

- ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் விஷேட தேவையுடையவர்களை இணங்காணுதல்.
- ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் விஷேட தேவையுடையவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படும் சவால்களை இணங்காணுதல்.
- இவ் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் விஷேட தேவையுடையவர்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை கண்டறிதல்.

## 5. ஆய்வு முறையியலும், தகவல் சேகரிப்பும்

[239] கஜநாயக்க, மஞ்சுள. மாற்றுத்திறனாளிகளின் அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் இலங்கையின் தேர்தல் செயன்முறை, தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், ப. 2-3

இவ்வாய்வினை மேற்கொள்ள முதலாம் நிலை, இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டும், பகுப்பாய்வு முறைகளான தொகுத்தறி முறையைப் பிரதானமாகவும், உய்த்தறி முறையைத் துணையாகவும் கொண்டுள்ளது. இத் தகவல்கள் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டுள்ளன.

### 5.1. முதலாம் நிலைத் தரவுகள்

இங்கு அதிகமாக ஆய்வுக் களத்துக்கு சென்று தகவல்கள் திரட்டப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மாற்றுத் திறனாளிகளில் சிலரை நேரடியாக பேட்டி காண்பதன் மூலமும் அவதானம், கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

### 5.2. இரண்டாம் நிலைத் தரவுகள்

இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளாக புள்ளிவிபரங்கள், ஆவணங்கள், ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள், அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களின் அறிக்கைகள் என்பனவும் இவ் ஆய்வினை மேற்கொள்ள துணைபுரிந்தன.

## 6. ஆய்வுப் பிரதேசம்

இவ்வாய்வுப்பிரதேசமானது 7°91′N வடக்கேயும் 81°52′ E கிழக்கேயும் அமையப்பெற்றுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளினை மையமாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பான்மையினராக முஸ்லிம்கள் தமிழ்மொழியினைப் பேச்சு மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேச மக்கள் தொகையாக 24047 கொண்டிருக்கிறது. மேலும் மக்கட்தொகை அடர்த்தியாக சதுர கிலோ மீட்டருக்கு 1414 நபர்களைக் கொண்டுள்ளதோடு இதன் பரப்பளவு 17சதுர கிலோ மீற்றராக காணப்படுகின்றது. ஆய்வு பிரதேசத்தின் மக்கள் தொகையில் 10%மான மக்கள் விஷேட தேவையுடைய மக்களாக காணப்படுகின்றனர்.

## 7. இலக்கியமீளாய்வு

ஆய்வுக்குட்படுத்தப்படும் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஆய்வு இதுவரையில் இடம்பெறவில்லை. இதுவே இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் முதல் மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஆய்வாகும். எனவே இவ்வாய்வுக்கு தேவையான இரண்டாம் நிலைத் தரவுகளாக நூலாய்வு காணப்படுகிறது. இது பின்வரும் நூல்களிலிருந்தும், சஞ்சிகைகளிலிருந்தும், ஏனைய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் இணையத்திலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன.

- **Musthafa.(2009)"மாற்றுத்திறனாளிகள் பற்றிய மதிப்பீடும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான சிபாரிசுகளும் - பாலமுனை, ஒலுவில், திராய்கேணி பிரதேசம் பற்றிய விசேட ஆய்வு"** பாலமுனை, ஒலுவில், திராய்கேணி பிரதேசத்தினை மையப்படுத்தியதான இவ்வாய்வானது மாற்றுத்திரனாளிகள், மாற்றுத்திரனாளிகள் என்பவர்கள் யார் என்பது பற்றியும், உலகளாவிய மற்றும் இலங்கையின்

மாற்றுத்திறனாளிகளின் புள்ளிவிபரங்களையும் எடுத்துக்காட்டுவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான சிபாரிசுகளை விளக்குகின்றது.

- **Sedeto, Dar (2019)" Socio-Economic Challenges of Persons with Disabilities: A Case Study of Ethiopia.** எனும் ஆய்வுக்கட்டுரையில் மாற்றுத்திரனாளிகள் என்பவர்கள் யார் என்பது பற்றியும், உலகளாவிய மாற்றுத்திறனாளிகளின் புள்ளிவிபரங்களையும் எடுத்துக்காட்டுவதுடன் அவர்கள் எதிரநோக்கும் தனிப்பட்ட உள உடல் ரீதியான சவால்களையும், சமூக ரீதியில் மாற்றுத்திறனாளிகளும் அவர்களின் குடும்பத்தினரும் எதிர்நோக்கும் சவால்களையும் விளக்குவதுடன் அவர்களின் பொருளாதார ரீதியிலான சவால்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- **ரசீன் ஜே.டி.எம்.(2006) பெரேரா, எம்.ஆர். (2007) எழுதிய " வெற்றிகரமான வாழ்க்கைக்கான உதவிக்கரம்"** எனும் உளவளத்துணை நூலில் மாற்றுதிறன் உள்ளவர்கள் எதிர்கொள்ளும் உளநோக்களுக்கான உளவளத்துணைசார் விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.
- **DR. Karna G.N. (1999) "United nations and Rights of disable persons : A study in indian perspective"** இந்நூல் மாற்றுதிறன் பற்றிய வரைவிலக்கணத்தையும், அவற்றின் பாகுபாடு பற்றியும் அவர்களது உரிமைகள், அவர்கள் தொடர்பிலான பிரகடனங்கள் பற்றியும் விளக்குகின்றது.
- **Asha Hans, Annie Patri (1999) Women Disability and identity** எனும் நூலில் மாற்றத்திறன் உள்ள பெண்கள் பற்றியும், 1981 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் பற்றியும் விளக்குகின்றது. இது சமூகவியல் சாரந்த் ஓர் ஆக்கமாகக் காணப்படுகின்றது.


- **Sugarnan.I(2017) "மாற்றுதிறனாளிகள் எதிர்நோக்கும் உள, சமூக சவால்கள்"** எனும் கட்டுரையானது, வலுவிழந்தோர் என்பவர்கள் யார் என்பது பற்றியும், இலங்கையின் மாற்றுத்திறனாளிகளின் புள்ளிவிபர மதிப்பீட்டினையும் 2040 காலப்பகுதியயயில் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கையின் எதிர்வுகூறலையும் கொண்டமைந்தோடு மாற்றுத்திறனாளிகளுக்கான இலங்கையின் சட்டங்களும், கொள்கைகளையும் குறிப்பிடுவதுடன் இதிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகத்தின் பங்குபற்றலினையும் விளக்கத்தினையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

மாற்றுத்திறனாளிகள் குறித்து பல ஆய்வுகளும் நூட்களும் ஆக்கங்களும் காணப்படினும் இப்பிரதேசத்தை மையப்படுத்தி இப்பிரதேச மாற்றுத்திறனாளிகள், அவர்களது வாழ்வாதாரம் தொடர்பிலான எவ்வித ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இவ் இடைவெளியினை பூர்த்தி செய்யும் அடிப்படையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

## 8. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்.

### 8.1. ஆய்வுப் பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளின் பற்றிய மதிப்பீடு

கிராமிய முறையில் அதிகம் தங்கி காணப்படும் பிரதேசமான இங்கு மக்கள் சேனைப் பயிர்ச் செய்கையிலும், விவசாயத்திலும் அதிகம் ஈடுபடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. பிரதேசத்தின் மக்கள் தொகையில் 10%மான மக்கள் விஷேட தேவையுடையோரக காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.




Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, 2019

இம் மாற்றுத்திறனாளிகளை பல்வேறு வகைகளாக பிரித்து நோக்கமுடியும். எனினும் இவர்களின் குறைகள் ரீதியாக ஆராய்வதே சிறந்ததாகும். இதனடிப்படையில் இவர்களை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தலாம்:

1. உடல் ரீதியான மாற்றுத்தின் உடையோர் :- அதில் பார்வைக்குறைபாடுகள், பேச்சு கேட்டல் குறைபாடு, கைகளில் ஏற்படும் குறைபாடு, கால்களில் ஏற்படும் குறைபாடு, இயங்குதலில் ஏற்படும் குறைபாடு

2. உளரீதியான மாற்றுத்திறன் உடையோர் :- கற்றல் சார்ந்த மாற்றுத்திறன், மன அழுத்தம், மன அழுத்தத்தின் போது எதிர்மறையாக சிந்தித்தல், மூளைக்கோளாறு, வளர்ச்சி சார்ந்த மாற்றுத்திறன் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

3. ஏனைய மாற்றுத்திறன்கள் :- மதுபாவனை, புகையிலைப்பாவனை, சட்டவிரேதாமான போதைப்பொருள் பாவனை போன்றவற்றை குறிப்பிட முடியும்.


**8.2.ஓட்டமாவடியின் மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளிவிபரங்கள்**

| வயது | மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 10-20 | 06 |
| 20-30 | 15 |
| 30-40 | 11 |
| 40-50 | 13 |
| 50-60 | 09 |
| 60-70 | 07 |
| 70-80 | 08 |

Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி,

மேலுள்ள அட்டவணையை நோக்கும்போது இப்பிரதேசத்தில் காணப்படும் பல வயதினைச் சார்ந்தோலும் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுகின்றனர்.அதிலும் 20-50 வயதிற்குட்பட்டோரே அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

இதுமாத்திரமன்றி இம்மாற்றுத்திறனாளிகளில் பெண்களின் எண்ணிக்கையை விட ஆண்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது ஆண்கள் 63 வீதமாகவும் பெண்கள் 37 வீதமாகவும் காணப்படுகின்றனர். இவ்எண்ணிக்கையானது மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது. இதனை பின்வரும் வரைபு மூலம் காணலாம்.





Source: Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி,

இப்பிரதேசத்தில் காணப்படும் மாற்றுத்திறனாளிகளை அவர்களுக்குள்ள குறைபாடு அல்லது இழப்பின் அடிப்படையில் நோக்கும்போது அது பின்வருமாறு காணப்படுகின்றது.

| அங்கவீனத்தின் வகை | அங்கவீனத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கால்களில் குறைபாடு | 30 |
| கைகளில் குறைபாடு | 22 |
| பேச்சு கேட்டல் குறைபாடு | 16 |
| மூளை வளர்ச்சியின்மை | 12 |
| வலிப்பு | 15 |
| நரம்பு தளர்ச்சி | 6 |
| இடுப்புக்கீழ் வழக்கமின்மை | 3 |
| உளரீதியான குறைபாடு | 2 |
| பல்வேறு அங்கவீனம் | 6 |

source: Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, 2019

இதிலும் குறிப்பாக கை, கால் மற்றும் பேசுதல், செவிமடுத்தல் என்பவற்றில் குறைபாடுடையோரே இப்பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதும் இம்மாற்றுத்திறனாளிகள் தம் வாழ்வாதாரத்தினை தாமே முன்னின்று பெற்றுக்கொள்வதற்கு சவாலானதாக அமைகின்றது.





source: Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, 2019

**8.3. ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரம்**

ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்கைத் தரத்தினை பார்க்கும்போது அவர்களின் குடும்பங்களின் நிலைமை ஏனைய சாதாரன குடும்பங்களின் நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் இருப்பதனை காணமுடிகின்றது. விவசாயம், மீன்பிடி, இறால்வளர்ப்பு, சேனைப்பயிர்ச்செய்கை போன்ற பல்வேறு விதமான தொழில்வாய்ப்புக்கள் ஓட்டமாவடிப்பிரதேசத்தில் காணப்படுகின்ற போதிலும் மாற்றுத்தினாளிகளுக்கான தொழில் வாய்ப்பானது குறைந்தளவிலே காணப்படுகின்றது. தையல், சிறுகடை, சுயதொழில் போன்ற குறிப்பிட்ட சில தொழில்வாய்ப்புக்களில் மாத்திரம் மிக குறைந்தளவிலேயே இவர்களால் ஈடுபடமுடிகின்றது.

அத்துடன் பெரும் எண்ணிக்கையான மாற்றுத்திறனாளிகள் தங்களது குடும்பங்களிலும் உறவினர்களிடமும் தங்கிவாழ்வோராக காணப்படுகின்றனர். இவர்களுடைய பொருளாதார நிலையை நோக்கும் போது அவர்களும் வறிய நிலையிலே காணப்படுகின்றனர். இவர்களை தாங்கிநிற்கும் குடும்பத்தினரின் தலா வருமானம் 300 ரூபாய்க்கும் குறைவாக காணப்படுவதுடன் இவர்களின் மருத்துவச் செலவு மற்றும் பராமரிப்பு என்பன கடிமானதாக உள்ளது. எனினும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான தொழில் பயிற்சி நிலையங்கள் ஒழுங்கற்ற முறையில் காணப்படுவதனால் தொழில் முறைகளை பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுவதோடு பெரும்பான்மையான மாற்றுத்திறனாளிகள் தொழிலற்றவர்களாக இருந்துவருவதுடன் அவர்களின் குடும்பச்சுமையும் அதிகரித்துச் செல்கின்றது.




Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, 2019

மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் மாற்றுத்திறனாளிகளில் 90 வீதமானோர் தொழில் இன்றியும், அதற்கான வழிகாட்டல்கள், நிதியுதவிகள் இன்மை மற்றும் தமது குடும்பத்தின் பின்தங்கிய நிலை காரணமாக 20 தொடக்கம் 60 வயதுக்கு மேட்பட்ட மாற்றுத்திறனாளிகள் சுயதொழில்வாய்ப்புக்கள் இன்றி தம் குடும்பத்தவர்களின் வருமானத்திலேயே தங்கி வாழ்கின்றனர். இதனால் இவர்களில் பெரும்பாலானோர் திரமணம் செய்யாது தமது குடும்பத்துடனேயே தங்கி வாழ்கின்றனர்.

இப்பிரதேச மாற்றுத்திறனாளிகளின் கல்வி நிலையினை பார்க்கும் போது மிக பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது, ஏனெனில் இவர்களில் அதிகமானோர் தமது குறைபாடுகளினால் தாமாகவே கல்விச் செயற்பாட்டிலிருந்தும் விடுபட்டதுடன் இவர்களைச் சார்ந்தோரும் இவர்களுக்கான கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பெதில் அக்கரை காட்டாமையினாலும் இவர்களுக்கென காணப்படும் விசேட தேவையுடையோருக்கான பாடசாலைகள், அதிலுள்ள வசதிகள் குறித்த அறியாமையினாலும் கல்விஅறிவில் பின்தங்கிக் காணப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதுமாத்திரமன்றி சமுதாயத்தின் குறுகிய மனப்பாங்கு அவர்களுக்குண்டான தயக்கம் என்பன சுதந்திரமாக அவர்கள் தாற்களாகவே முன்வந்து இயங்குவதில் தடைகளை ஏற்படுத்துகின்றன. இவர்கள் மற்றவருடன் தன்னை ஒப்பீட்டு தம்மை தாழ்நிலையாக நோக்குவதன் விளைவால் தாமும் நோய்வாய்யடுவதோடு தான் தாங்கியிருக்கும் குடும்பங்களையும் பிரச்சினைக்கு உள்ளாக்குகின்றனர். இதனால் இவர்களின் மருத்துவ செலவு அதிகரிக்கின்றமையால் அக்குடும்பங்கள் பொருளதார ரீதியாக பின்தங்கி செல்வதற்கும் காரணமாகின்றது. இத்தோடு அக்குடும்பங்கள் தமது ஏனைய குடும்ப உறவுகளிடமிருந்தும் பின்தள்ளப்பட்டு அக்குடும்ப உறவுகள் பிரிந்து செல்லும் வாய்ப்பும் அதிகமாக உள்ளது. மேலும் மாற்றுத்திறனாளிகள் மன உளச்சலுக்கு உட்படுவதுடன் அவர்களது குடும்பங்களும் மனஉளச்சலுக்கு உள்ளாகின்றது. இதனால் அக்குடும்பங்கள் சமூகத்தில் முன் வராமல் ஒதுங்கி வாழும் நிலைமைகளும் தோன்றுகின்றது.

## 9. ஆய்வு முடிவுகளும் சிபாரிசுகளும்

மாற்றுதிறனாளிகள் எனப்படுவோர் சமூகத்தின் ஓர் அங்கத்தவராவர் அவர்களும் இச்சமூக உருவாக்கத்தின் பங்குதாரர்கள். அவர்களுக்கும் சமூகத்தில் முக்கிய பங்கும் சம உரிமையும் உண்டு. தற்காலத்தில் எத்தனையோ மாற்றுத்திறனாளிகள் சாதனையாளர்களாகவும் ஏனையோருடன் போட்டிபோட்டு முன்னேறக் கூடியவர்களாகவும் காணப்படுகிறார்கள். அவ்வாறே ஓட்டமாவடிப்பிரதேசத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளும் மாற வேண்டும். இப்பிரதேசத்தில் இந்நிலையில் பல வயதுடையோரும் காணப்படுவதுடன் அவர்களது இயலாமையும் பல்வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. அவர்களில் அதிகமானோர் கை, கால் குறைபாடுடையோராக காணப்படுவதும் அவர்களில் அதிகமானோர் ஆண்களாகக் காணப்படுவதும் அவர்கள் தங்களது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுவதில் தாக்கம் செலுத்துவதாக அமையும். இதனால் அவர்களது  வாழ்வாதார நிலையும் பின்தங்கியே காணப்படுகின்றது. அதாவது அவர்களில் பெரும்பாலானோர் சிறு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதுடன் அவர்களது கல்வி நிலையானது மிகப் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் பாடசாலை செல்வதும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் இவர்கள் மாத்திரமன்றி இவர்களைச் சார்ந்த, இவர்களைப் பராமரிக்கின்ற இவர்களது குடும்பத்தினரும் காலங்காலமாக வறிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். இதுமாத்திரமன்றி இத்தகைய வலதுகுறைந்தோர் தங்களை ஏனையோருடன் ஒப்பிட்டு தாழ்வுச்சிக்கல் மற்றும் பிற உளநோய்களுக்கு ஆளாகின்ற நிலைமைகளும் காணப்படுவதுடன் இதன் காரணமாக இவர்கள் சமூகத்தை விட்டும் ஒடுங்கி வாழக்கூடிய நிலையும் காணப்படுகின்றது.

**சிபாரிசுகள்:**

- இயலாமை குறித்த பொது விழிப்புணர்வையும் புரிதலையும் அதிகரித்தல்.
- மாற்றத்திறனாளிகள் தம்மை குறைபாடுடையோராகக் கருதி பின்வாங்காது தம்மை வளப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டல் வேண்டும்.
- இவர்களை சார்ந்திருக்கும் இவர்களது குடும்பத்தினர் இவர்களை இயலாதோராகக் கருதாது ஊக்குவிப்புக்களை வழங்கவதுடன் அதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

- ➢ இவர்களைப் பராமரிக்கும் குடும்பங்களுக்கு முறையான கொடுப்பனவுகளையும் ஊக்குவிப்புக்களையும் விழிப்புணர்வுகளையும் வழங்குதல்.
- ➢ இலங்கையில் வேற்று பிரதேசங்களில் காணப்படுவது போன்று இவ்வாய்வு பிரதேசத்திலும் மாற்றுதிறனாளிகளுக்கு மனிதவள திறனை மேம்படுத்தல் மற்றும் தொழிற் கல்வி வழங்கும் நிலையங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளினூடாக நிறுவுதல் வேண்டும்.
- ➢ இவர்களது திறமைகளை சமூகத்தின் மத்தியில் வெளிக்கொணர்ந்து அவர்களது தன்னம்பிகையை வளர்த்து அவர்களும் சக மனிதர்களைப் போன்றே ஆற்றலுடையோர் எனக் காட்டல்.
- ➢ இவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் மேலும் அதற்கான வசதிவாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான முன்னெடுப்புக்களை மேற்கொள்தல் வேண்டும்.

இவ்வாறு இவர்களுக்கான உதவிகள், கல்வி, தொழில்வாய்ப்பு, சமூக அங்கீகாரம், குடும்பத்தினரின் ஆதரவு, ஒத்துழைப்பு என்பன சரியான முறையில் வழங்கப்படும் போது இவர்களும் சாதனையாளர்களாக மாறி சமூகத்தில் சிறப்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் பிரதேச அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் பங்காளிகளாக மாற முடியும்.

## 10. **உசாத்துணை**


Asha Hans & Annie. (1999).”women, Disabilty and Identity” thousend Oaks london, Sage publication, New Delhi pp: 190 -219. isbn – 13 :978-0761997009.

Dr. Karana,G.N (1999) “United Nation and Rights of Disabled: A Study in Indian Prespective” APH Publishing corporation, New Dilhi pp 40 -60. isbn 81-7648-104-1. retrived from http://books.google.lk/books?id=mXWTU-CCTBCAC&pg=PR3&source=gbs_selected

Department of Census and Statistics, Diseability in srilanka, “Retrived From” https://www.unstats.un.org. (powerpoint Slides)

Musthafa.A.M.M, (2009) “மாற்றுத்திறனாளிகள் பற்றிய மதிப்பீடும்,வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான சிபாரிசுகளும் - பாலமுனை, ஒலுவில், திராய்கேணி பிரதேசம் பற்றிய விசேட ஆய்வு”, தென்கிழக்கு பல்கலைக்கழகம். retrived from: www.researchgate.net

Poalvilson.(2018)” மாற்றுத்திறனாளிகளை ஓரங்கட்டாதீர்கள்”.வாரமஞ்சரி,02 September. retrived from: http://www.varamanjari.lk

Sedeto M.H, Dar.M.J.2019. Socio-Economic Challenges of Persons with Disabilities: A Case Study of Ethiopia. Global Journal of HUMAN-SOCIAL SCIENCE: C Sociology & Culture. . retrived from: http://socialscienceresearch.org/index.php/GJHSS/article/view/2807.

Source: பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, 2019.

World Health Organization (2011), “World report on Diseability”,Geneva, Swizerland, WHO publication. retrivedfromhttp://www.who.int./about/licensing/copyright_form/en/index.html)

Sugarnan.I(2017) “மாற்றுதிறனாளிகள் எதிர்நோக்கும் உள, சமூக சவால்கள்” Workiing Paper – 07, தேசிய சமூக அபிவிருதி நிறுவனம்.07 january.